THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Friday, 12th September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : கனம் உள்நாட்டு அமைச்சர் அவர்கள் சென்னையில் இல்லை. அவர் சம்பந்தப்பட்ட கேள்விகளை அப்புறம் எடுத்துக்கொள்ளுகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இப்பொழுதுதான் எட்டயபுரத்திலிருந்து வந்திருக்கிறார்கள். சபைக்கு வருவதற்கு கொஞ்சம் நேரம் ஆகும். அவர் கேள்விகளை கொஞ்ச நேரத்திற்குப் பிறகு எடுத்துக் கொள்கிறேன்.

"The Hindu"

* *S.N.Q. No.* 5.—SRI N. K. PALANISAMI AND SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was a strike in "The Hindu" during August 1958;

(*b*) whether the same was settled on the intervention of the Government; and

(*c*) if so, what the terms of settlement are?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government could not settle the dispute by conciliation. However, as a result of the agreement reached between the parties on 10th August 1958, the strike was called off on 11th August 1958.

(*c*) The terms of the agreement are—

(i) the workers will express unhappiness over the incidents that took place following the strike;

(ii) the question of payment of wages for the strike period from 30th July to 10th August will be determined by the Commissioner of Labour;

(iii) the worker who was dismissed will be reinstated on his giving a letter expressing regret; and

(iv) the workers on strike will resume duties on 11th August 1958.

[12th September 1958

SRI N. K. PALANISAMI : பாக்டரி சட்டம் 61-வது செக்ஷன், 10-வது பிரிவின்படி ஷிப்டை மாற்றுவது என்றால் குறைந்தது ஒரு வாரம் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். தொழிற் தகராறு சட்டத்தின்படி 9-வது செக்ஷன் பிரகாரம் 21 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அப்படியிருந்தும் நோட்டீஸ் கொடுக்காமல் ஷிப்டை மாற்றி, ஒப்பந்தத்தின் பேரில் சம்பந்தப்பட்ட தொழிலாளி மன்னிப்பு கொடுக்கவேண்டும், லேபர் கமிஷனர் முன்பு ஆஜராகவேண்டும் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : இது முடிந்து போன ஒரு தகராறு. அதை மீண்டும் கிளப்பி, இப்பொழுது இருக்கிற நல்ல ஸௌஜன்ய நிலைமையைக் கெடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the management is not at all satisfied with the settlement reached ?

THE HON. SRI R. VENKATARAMAN : I think the question should be put to the management and not to the Minister.

SRI M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள் சொன்ன யோசனையை வரவேற்கிறேன். அதே யோசனையை நிர்வாகத்தினிடமும் சொல்லி, இந்த தொழிற் சச்சரவு சம்பந்தப்பட்டவரை விவகாரம் தீர்ந்து விட்டதாகக் கருதி ஸௌஜன்ய நிலைமை ஏற்படுவதற்கு சர்க்கார் புத்திமதி சொல்லுவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்காரைப் பொறுத்த வரையில் இது ஒரு தீர்ந்துவிட்ட பிரச்னை என்றுதான் நினைக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தொழிற்சாலைக்குச் சென்று, அங்கு இருந்த எல்லா தொழிலாளர்களையும் நடந்ததை மறந்துவிட்டு நல்ல முறையில் வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இது முடிந்துவிட்ட விஷயமாகத்தான் நான் கருதுகிறேன்.

Land Revenue

* 180 *Q*.—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ராமநாதபுரம் ஜமீனில் இன்றுவரை தவணை கடந்து ஆயிரம் ரூபாய்க்கு மேல் கிஸ்தி (நிலவரி) பாக்கியுள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் தரவேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Ten persons.

(*b*) Rs. 27,987–10–0.

SRI N. R. THIAGARAJAN : கோடைக்கானலில் சௌகரியமாகத் தங்குவதற்கு ஒரு விடுதி கட்டியாகவேண்டும். தங்குவதற்கு சௌகரியமான விடுதி இல்லாததால் அங்கு போகிறவர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, எவ்வளவு நாட்களுக்குள் விடுதி கட்டி முடிக்கப்படும் ?

MR. SPEAKER : இது 180-வது கேள்வியைப் பற்றியது. நீங்கள் கேட்ட கேள்வி வேறு. நிதி அமைச்சர் வந்தவுடன் அது எடுத்துக் கொள்ளப்படும்.

SRI K. RAMACHANDRAN : இந்த நில வரி பாக்கிகள் எத்தனை பசலிகளாக வசூலாகாமல் இருந்துகொண்டிருக்கின்றன ? அதை வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்கு என்னிடம் தகவல் இல்லை. 1,000 ரூபாய்க்கு மேல் கிஸ்தி பாக்கியுள்ளவர்கள் எவ்வளவு பேர் என்றுதான் கேள்வி கேட்கப்பட்டது.